**கவனிக்க**.- *22.11.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III) மற்றும் பகுதி III ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1839 - 2013 නොවැම්බර් මස 29 වැනි සිකුරාදා - 2013.11.29

*1839 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 1614 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1616 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 1619 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்***. *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்***, *அதாவது 2013, திசெம்பர் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, திசெம்பர் மாதம் 06 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## கிழக்கு மாகாண மேல் நீதிமன்றம்

பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் உரிமைகோரப்படாத அரசுடைமையாக்கப்பட்ட மோட்டார் வாகனங்கள் முத்திரையிடப்பட்ட விலைமனு மூலம் விற்பனை செய்வதற்காக மேல் நீதிமன்றத்தினால் கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் கோரல் – 2013

அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றத்தினால் பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் உரிமை கோரப்படாத அரசுடைமையாக்கப்பட்ட மோட்டார் வாகனங்கள் பகிரங்க விலைமனு கோரல் நடைமுறை மூலம் விற்பனை செய்யப்பட இருக்கின்றன. இதற்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 2013, மார்கழி மாதம் 11 ஆந் திகதியன்று பி. ப. 3.00 மணிவரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்பங்கள் யாவும் "மேல் நீதிமன்ற நீதிபதி, மேல் நீதிமன்றம், கல்முனை" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "அக்கரைப்பற்று நீதிமன்றத்தினால் அரசுடைமையாக்கப்பட்ட வாகனத்திற்கான விலை மனு" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் மேல் நீதிமன்ற முத்திரை பொறிக்கப்பட்ட மற்றும் கணக்காளரின் கையொப்பம் இடப்பட்ட படிவங்களில் மாத்திரம் விண்ணப்பிக்கப்பட வேண்டும்.

கேள்விப்பத்திர நடைமுறையூடாக விற்பனை செய்யப்படவுள்ள மோட்டார் வாகனங்கள் தொடர்பில் உரிமை கோருபவர்கள் எவரும் இருப்பின் விலைமனு கோரும் இறுதித் திகதியில் பி. ப. 3.00 மணிக்கு முன்னர் தமது உறுதிப்படுத்தப்பட்ட உரிமை கோரிக்கையினை முன்வைக்க வேண்டும். தவறும் பட்சத்தில் அவை தொடர்பாக எந்த நடவடிக்கையும் ஏற்கப்பட மாட்டாது என்பதனையும் அறியத்தருகின்றோம்.

மோட்டார் வாகனங்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியான விலைமனு சமர்ப்பிக்கப்பட வேண்டும். இதற்காக மீள் செலுத்தப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் நூறு (100) ரூபாவுடன் பின்வரும் அடிப்படையிலான வைப்புப் பணத்தினை செலுத்துதல் வேண்டும். இவ்விண்ணப்பப்பத்திரம் வழங்குதல் 2013, மார்கழி மாதம் 11 ஆந் திகதியன்று மு. ப. 11.30 மணியுடன் நிறுத்தப்படும்.

| தொடர் இலக்கம் | வாகன விபரம் | வகை | விற்பனைக்காக வழங்கப்பட்ட இலக்கம் | வைப்புக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 1 | வான் வண்டி - 1 | TOYOTA-HIACE | MCA/01/2013 | 10,000 |
| 2 | வான் வண்டி - 1 | TOYOTA-KG-LH162V | MCA/02/2013 | 10,000 |

குறிப்பிட்ட கால நேரத்திற்குள் பெற்றுக்கொள்ளப்படும் முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் மார்கழி மாதம் 11 ஆந் திகதியன்று பி. ப. 3.00 மணிக்கு பிரசன்னமான கேள்விமனு சமர்ப்பித்தவர்கள் முன்னிலையில் மேல் நீதிமன்ற கொள்வனவு குழுவினால் திறக்கப்படும்.

விலை மனுவின் மூலம் கூடிய விலையைக் குறிப்பிட்டு சமர்ப்பித்த விண்ணப்பதாரிகளுக்கு அப்பொருளை விற்பனை செய்வதற்கான அங்கீகாரத்தினை மேல் நீதிமன்ற கொள்வனவு குழு பிறப்பிக்கும். இதன் அடிப்படையிலான விற்பனை நடைமுறையினை குறிப்பிட்ட நீதிமன்றமான அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றம் மேற்கொள்ளும்.

விலைமனு கோரலின் ஊடாக விற்பனை செய்யப்படவிருக்கும் மோட்டார் வாகனங்களை நேரடியாக சமுகமளித்து கடமை நாட்களில் காலை 10.00 மணி தொடக்கம் பி. ப. 2.30 மணி வரைக்கும் அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்ற பதிவாளருடன் தொடர்புகொண்டு பார்வையிடலாம்.

விற்பனை செய்யப்படவிருக்கும் மோட்டார் வாகனங்களுக்கு மதிப்பீட்டுப் பெறுமதி கணிக்கப்பட்டுள்ளதால் சமர்ப்பிக்கப்பட்ட விலைமனுக்களில் குறிப்பிட்ட பெறுமதி குறைவானதாகக் காணப்படும் சந்தர்ப்பங்களில் அவ்வாகனங்களினை விற்பனை செய்வதிலிருந்து நிறுத்திவைப்பதற்கு நீதிமன்றுக்கு பூரண அதிகாரம் உண்டு.

விற்பனை செய்யப்படும் வாகனம்/வாகனங்களை பணம் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்ற பின்னர் உடனடியாக நீதிமன்ற வளாகத்திலிருந்து அகற்றப்படுதல் வேண்டும். மேலும் எல்லாக் கொடுப்பனவுகளும் பணமாகச் செலுத்தப்படுதல் வேண்டும். காசோலைக் கொடுப்பனவு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

கே. சிவபாதசுந்தரம்,
மேல் நீதிமன்ற நீதிபதி,
கிழக்கு மாகாணம்.

கிழக்கு மாகாண மேல் நீதிமன்றம்,
கல்முனை.

| தொடர் இலக்கம் | வழக்கு இலக்கம் | வாகன விபரம் | வர்க்கம் |
|---|---|---|---|
| 01 | AR/1281/08 | வான் வண்டி-01 | TOYOTA-HIACE |
| 02 | AR/1478/08 | வான் வண்டி-01 | TOYOTA-KG-LH162V |

11-868

## கிழக்கு மாகாண மேல் நீதிமன்றம்

*பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் உரிமைகோரப்படாத அரசுடைமையாக்கப்பட்ட மோட்டார் வாகனங்கள் முத்திரையிடப்பட்ட விலைமனு மூலம் விற்பனை செய்வதற்காக மேல் நீதிமன்றத்தினால் கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் கோரல் – 2013*

பொத்துவில் மாவட்ட நீதவான் நீதிமன்றத்தினால் பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் உரிமை கோரப்படாத அரசுடைமையாக்கப்பட்ட மோட்டார் வாகனங்கள் பகிரங்க விலைமனு கோரல் நடைமுறை மூலம் விற்பனை செய்யப்பட இருக்கின்றன. இதற்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 2013, மார்கழி மாதம் 11 ஆந் திகதியன்று பி. ப. 3.00 மணிவரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்பங்கள் யாவும் "மேல் நீதிமன்ற நீதிபதி, மேல் நீதிமன்றம், கல்முனை" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்பட வேண்டும். கடித முகப்பின் இடதுபக்க மேல் மூலையில் "பொத்துவில் மாவட்ட நீதிமன்றத்தினால் அரசுடைமையாக்கப்பட்ட வாகனத்திற்கான விலை மனு" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் மேல் நீதிமன்ற முத்திரை பொறிக்கப்பட்ட மற்றும் கணக்காளரின் கையொப்பம் இடப்பட்ட படிவங்களில் மாத்திரம் விண்ணப்பிக்கப்பட வேண்டும்.

கேள்விப்பத்திர நடைமுறையூடாக விற்பனை செய்யப்படவுள்ள மோட்டார் வாகனங்கள் தொடர்பில் உரிமை கோருபவர்கள் எவரும் இருப்பின் விலைமனு கோரும் இறுதித் திகதியில் பி. ப. 3.00 மணிக்கு முன்னர் தமது உறுதிப்படுத்தப்பட்ட உரிமை கோரிக்கையினை முன்வைக்க வேண்டும். தவறும் பட்சத்தில் அவை தொடர்பாக எந்த நடவடிக்கையும் ஏற்கப்பட மாட்டாது என்பதனையும் அறியத்தருகின்றோம்.

மோட்டார் வாகனங்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியான விலைமனு சமர்ப்பிக்கப்பட வேண்டும். இதற்காக மீள் செலுத்தப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் நூறு (100) ரூபாவுடன் பின்வரும் அடிப்படையிலான வைப்புப் பணத்தினை செலுத்துதல் வேண்டும். இவ்விண்ணப்பப்பத்திரம் வழங்குதல் 2013, மார்கழி மாதம் 11 ஆந் திகதியன்று மு. ப. 11.30 மணியுடன் நிறுத்தப்படும்.

| தொடர் இலக்கம் | வாகன விபரம் | வகை | விற்பனைக்காக வழங்கப்பட்ட இலக்கம் | வைப்புக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 1 | TATA Dimobatta-01 | TATA-ACE | MCP/01/2013 | 7,500 |
| 2 | Tafe Tractor-01 | TAFE-Tafe 45 DI | MCP/02/2013 | 7,500 |

குறிப்பிட்ட கால நேரத்திற்குள் பெற்றுக்கொள்ளப்படும் முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் மார்கழி மாதம் 11 ஆந் திகதியன்று பி. ப. 3.00 மணிக்கு பிரசன்னமான கேள்விமனு சமர்ப்பித்தவர்கள் முன்னிலையில் மேல் நீதிமன்ற கொள்வனவு குழுவினால் திறக்கப்படும்.

விலை மனுவின் மூலம் கூடிய விலையைக் குறிப்பிட்டு சமர்ப்பித்த விண்ணப்பதாரிகளுக்கு அப்பொருளை விற்பனை செய்வதற்கான அங்கீகாரத்தினை மேல் நீதிமன்ற கொள்வனவு குழு பிறப்பிக்கும். இதன் அடிப்படையிலான விற்பனை நடைமுறையினை குறிப்பிட்ட நீதிமன்றமான பொத்துவில் மாவட்ட நீதவான் நீதிமன்றம் மேற்கொள்ளும்.

விலைமனு கோரலின் ஊடாக விற்பனை செய்யப்படவிருக்கும் மோட்டார் வாகனங்களை நேரடியாக சமுகமளித்து கடமை நாட்களில் காலை 10.00 மணி தொடக்கம் பி. ப. 2.30 மணி வரைக்கும் பொத்துவில் மாவட்ட நீதவான் நீதிமன்ற பதிவாளருடன் தொடர்புகொண்டு பார்வையிடலாம்.

விற்பனை செய்யப்படவிருக்கும் மோட்டார் வாகனங்களுக்கு மதிப்பீட்டுப் பெறுமதி கணிக்கப்பட்டுள்ளதால் சமர்ப்பிக்கப்பட்ட விலைமனுக்களில் குறிப்பிட்ட பெறுமதி குறைவானதாகக் காணப்படும் சந்தர்ப்பங்களில் அவ்வாகனங்களினை விற்பனை செய்வதிலிருந்து நிறுத்திவைப்பதற்கு நீதிமன்றுக்கு பூரண அதிகாரம் உண்டு.

விற்பனை செய்யப்படும் வாகனம்/வாகனங்களை பணம் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்ற பின்னர் உடனடியாக நீதிமன்ற வளாகத்திலிருந்து அகற்றப்படுதல் வேண்டும். மேலும் எல்லாக் கொடுப்பனவுகளும் பணமாகச் செலுத்தப்படுதல் வேண்டும். காசோலைக் கொடுப்பனவு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

கே. சிவபாதசுந்தரம்,
மேல் நீதிமன்ற நீதிபதி,
கிழக்கு மாகாணம்.

கிழக்கு மாகாண மேல் நீதிமன்றம்,
கல்முனை.

| தொடர் இலக்கம் | வழக்கு இலக்கம் | வாகன விபரம் | வர்க்கம் |
|---|---|---|---|
| 01 | 12958/PC/10 | TATA Dimobatta-01 | TATA-ACE |
| 02 | 10553/MT/10 | Tafe Tractor-01 | TAFE-Tafe 45 DI |

11-869

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் வரையறுக்கப்பட்ட தனியார் பொறுப்புள்ள கம்பனி 2008, பெப்புருவரி 28 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : பெற்றோ லங்கா ட்றேடிங் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவிலக்கம் : பீவீ 63217
கூட்டிணைப்புத் திகதி : 2008, பெப்புருவரி 28
பதிவு முகவரி : இல. 527/3, புல்லர்ஸ் வீதி, கொழும்பு 8

பெற்றோ லங்கா ட்றேடிங் (பீவீர்) எல்ரீடீ,
கம்பனி செயலாளர்.

இல. 527/3, புல்லர்ஸ் றோட்,
கொழும்பு 8.

11-857

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : ரமேக்கா ஷிப்பின் அன்ட் ட்ரவெல் கிளப் (பிறைவெட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ 95393
பதிவு அலுவலகம் : # இல. 70-பி11, லக்கி பிளாஸா, கொழும்பு 03

ஷெரின் ஒட்ரி பிரேமசிங்க,
கம்பனி செயலாளர்.

11-874

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி பின்வருமாறு மாற்றி அமைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

பெயர் : எல்ஒஎல்சீ எஸ்ட்டேட் லிமிட்டெட்
பதிவிலக்கம் : பிபீ 3852
பதிவு முகவரி : இல. 100/1, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, ராஜகிரிய
கம்பனியின் புதிய பெயர் : கிறீன் சிட்டி எஸ்ட்டேட்ஸ் லிமிட்டெட்

செல்வி சீ. எஸ். இம்மானுவெல்.

2013, நவெம்பர் 5.

11-901

---

## கம்பனியின் இறுதிப் பொதுக்கூட்டத்திற்கும் கலைத்தலுக்குமான அறிவித்தல்

மைலான்ட்ஸ் இன்வெஸ்ட்மென்ட்ஸ் லிமிட்டெட்
(அங்கத்தவர்களின் தன்னிச்சையான கலைத்தலில் உள்ளது)

கம்பனியின் பதிவு இல. பீபி 26

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 331(2) ஆம் பிரிவிற்கமைவாக மேற்படி கம்பனியின் கலைப்புக்கு முந்திய இறுதிப் பொதுக்கூட்டம் 2014 ஆம் ஆண்டு தை மாதம் 10 ஆந் திகதி பிற்பகல் 3.30 மணியளவில் கொழும்பு 4, காசல் ஒழுங்கை, இலக்கம் 2 இல் அமைந்துள்ள எஸ்ஜேஎம்எஸ் அசோசியேட்ஸ் நிறுவனத்தின் சபை அறையில் நடைபெறவுள்ளது. மேற்படி கூட்டமானது கலைத்தல் பற்றிய விபரங்களை அங்கத்தவர்களுக்கு சமர்ப்பிப்பதற்காக கூட்டப் படுகின்றது. அது,

1. ஒடுக்குதல் எவ்வாறு நடைபெற்றது,
2. கம்பனியின் சொத்துக்கள் ஏதுமிருப்பின் அவற்றை விற்று ஒதுக்கிய முறை, மற்றும்
3. இவை பற்றிய விளக்கம் அளித்தல்.

பீ. ஈ. ஏ. ஜயவிக்ரம அன்ட் ஜீ. ஜே. டேவிட்,
கலைப்பாளர்கள்,
மைலான்ட்ஸ் இன்வெஸ்ட்மென்ட்ஸ் லிமிட்டெட்.

2013, கார்த்திகை 06.

11-925

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச்செய்தல்

இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசுக்கும் பொது மக்களுக்கும் தெரிவிப்பது, இலங்கையில் இல. 36, ஹோட்டன் பிளேஸ், கொழும்பு 7 இல் வசிக்கும் டில்ஷாத் டாஹேர் பன்துக்வல (மறுபெயர்) டில்ஷாத் அப்பாஸ் இப்றாஹீம் ஜபர்ஜீ தெரிவிப்பதாவது, இல. 36, ஹோட்டன் பிளேஸ், கொழும்பு 7 இல் முகவரி உடைய அப்பாஸ் இப்றாஹீம் ஜபர்ஜீ, சயித் ஹுசைன் அப்பாஸ் இப்றாஹீம் ஜபர்ஜீ அவர்களுக்கு என்னால் வழங்கப்பட்டு 1994, திசெம்பர் மாதம் 28 ஆந் திகதி உடையதும் பிரசித்த நொத்தாரிசான கந்தசாமி கவின் அவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட மேற்படி தத்துவப்பத்திரம் இன்று முதல் என்னால் இரத்துச்செய்யப்பட்டு செயற்பட முடியாதென அறியத்தருகின்றேன்.

இதற்கப்பால் மேற்படி பெயருடையவருடன் கொடுக்கல் வாங்கல் அல்லது வேறு எவ்விதத்திலும் எனது தத்துவகாரருடன் நடைமுறைப் படுத்தினால் அதற்கு நான் பொறுப்பு இல்லை என இத்தால் தெரிவிக்கின்றேன்.

டில்ஷாத் டாஹேர் பன்துக்வல (மறுபெயர்)
டில்ஷாத் அப்பாஸ் இப்றாஹீம் ஜபர்ஜீ.

11-904

## கம்பனியின் இறுதிப் பொதுக்கூட்டத்திற்கும் கலைத்தலுக்குமான அறிவித்தல்

வெனிவெல்ல இன்வெஸ்ட்மென்ட்ஸ் லிமிட்டெட்
(அங்கத்தவர்களின் தன்னிச்சையான கலைத்தலில் உள்ளது)

கம்பனியின் பதிவு இல. பீபி 100

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 331(2) ஆம் பிரிவுக்கமைவாக மேற்படி கம்பனியின் கலைப்புக்கு முந்திய இறுதிப் பொதுக்கூட்டம் 2014 ஆம் ஆண்டு தை மாதம் 10 ஆந் திகதி பிற்பகல் 4.00 மணியளவில் கொழும்பு 4, காசல் ஒழுங்கை, இலக்கம் 2 இல் அமைந்துள்ள எஸ்ஜேஎம்எஸ் அசோசியேட்ஸ் நிறுவனத்தின் சபை அறையில் நடைபெறவுள்ளது. மேற்படி கூட்டமானது கலைத்தல் பற்றிய விபரங்களை அங்கத்தவர்களுக்கு சமர்ப்பிப்பதற்காக கூட்டப்படுகின்றது. அது,

1. ஒடுக்குதல் எவ்வாறு நடைபெற்றது,
2. கம்பனியின் சொத்துக்கள் ஏதுமிருப்பின் அவற்றை விற்று ஒதுக்கிய முறை, மற்றும்
3. இவை பற்றிய விளக்கம் அளித்தல்.

பீ. ஈ. ஏ. ஜயவிக்ரம அன்ட் ஜீ. ஜே. டேவிட்,
கலைப்பாளர்கள்,
வெனிவெல்ல இன்வெஸ்ட்மென்ட்ஸ் லிமிட்டெட்.

2013, கார்த்திகை 06.

11-926

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : டபிள்யூ. டபிள்யூ. டபிள்யூ. றூம்ஸ்புக் நெட் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவிலக்கம் : பீவீ 95099
பதிவு முகவரி : இல. 255, கஹட்டகஸ்தென, ருவன்வெல்ல

11-897

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : கிங் ரிச் இன்டர்நஷனல் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவிலக்கம் : பீவீ 66793
பதிவு முகவரி : இல. 214/3/2/11, கேம்ப்வேப் பிளாசா, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க மாவத்தை, கொழும்பு 12

11-898

---

## அற்றோணி தத்துவத்தை இரத்துச்செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 24, இறப்பர்வத்தை வீதி, தெல்கந்த, நுகேகொடை என்ற விலாசத்தில் வசிக்கும் முஹம்மட் ஹபீஸ் சிங்ஹவன்ச ஆகிய என்னால் இலக்கம் 24, இறப்பர்வத்தை வீதி, தெல்கந்த, நுகேகொடை என்ற விலாசத்தில் வசிக்கும் றோஷினி நிகாரா சாதிகீன் என்பவருக்கு பிரசித்த நொத்தாரிசு புஷ்ரா முஹீஸா ஹாஷிம் அவர்களால் 10, சனவரி 2002 ஆம் ஆண்டு எழுதப்பட்டு வழங்கப்பட்ட இல. 173 என்ற அற்றோணி தத்துவத்தை எனது விருப்பத்தின் பேரிலும் அபிலாஷையின் பேரிலும் இத்தால் இரத்துச் செய்கிறேன் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் மக்களுக்கும் இத்தால் அறிவித்துக்கொள்கிறேன்.

முஹம்மட் ஹபீஸ் சிங்ஹவன்ச.

11-942

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : ஹுவாங் ஜியா டங் டா இன்டர்நஷனல் மினிங் இன்வெஸ்ட்மென்ட் கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 94859
கூட்டிணைப்புத் திகதி : 03.10.2013
பதிவு முகவரி : இல. 26, 13 ஆவது ஒழுங்கை, காலி வீதி, கொள்ளுப்பிட்டி

லீகல் அன்ட் கோர்ப்பரேட் கன்சல்டன்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

இல. 156, 1/8, ஹல்ஸ்ரொப் வீதி,
கொழும்பு 12.

11-949

---

## அற்றோணி தத்துவத்தை இரத்துச்செய்தல்

அல்பிட்டிய, கந்த, கல்தென்ன வீதி, கின்கிரியவத்தையில் வசிக்கும் ஹெட்டி ஆராச்சிகே தோன் உபாலி (தேசிய அடையாள அட்டை இல. 432792005V) ஆகிய என்னால் காலி, தலபிட்டி, பண்டாரநாயக்க ஒழுங்கை, இல. 106 இல் வசிக்கும் முஹம்மது நதீர் முஹம்மது பிஸ்ருல் ஹாபி (தேசிய அடையாள அட்டை இல. 551162141V) என்பவருக்கு காலியைச் சேர்ந்த நொத்தாரிசு என். டி. பண்டிதரத்ன அவர்களால் உறுதிப்படுத்தப்பட்டு அளிக்கப்பட்ட 2009, ஏப்பிறல் 11 ஆந் திகதிய 4013 ஆம் இலக்கம் கொண்ட அற்றோணித் தத்துவத்தை இன்றிலிருந்து இரத்துச்செய்வதாக இத்தால் அறிவிக்கிறேன்.

ஹெட்டி ஆராச்சிகே தோன் உபாலி.

11-951

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டது என அறியத்தருகின்றோம் :-*

*கம்பனியின் பெயர்* : எக்ஜோடிக் எக்ஸ்கேப் டுவர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ 95188
*கூட்டிணைப்புத் திகதி* : 28.10.2013
*பதிவு முகவரி* : இல. 37, வெலன்கஹவத்த, மிரிஸ்வத்த, பிலியந்தலை

தொன் தினேஷ் துமிந்த பண்டித,
பணிப்பாளர்.

11-953

---

## அற்றோணி தத்துவத்தை இரத்துச்செய்தல்

பத்தரமுல்லை, தலங்கம வடக்கு, முத்திட்டுகொட வீதி, இல. 604/3பி என்ற முகவரியில் வசிக்கும் மிட்டியமுல்லே ஆரச்சிகே அருண சுதர்சக மற்றும் கௌரி மஞ்சுளா செனவீர ஆகிய நாங்கள் பிரசித்த நொத்தாரிசு சீ. சீ. செனவீர என்பவரால் 2005.07.14 ஆந் திகதி எழுதி உறுதிப்படுத்தப்பட்ட இல. 498 உடைய அற்றோணித் தத்துவப்பத்திரம் மூலம் கம்புருகமுவ, 'சம்பிகா' எனும் முகவரில் வசிக்கும் சந்திரதாச செனவீர என்பவருக்கு வழங்கப்பட்டிருந்த அற்றோணித் தத்துவத்தை இத்தால் இரத்துச்செய்கிறோம்.

மிட்டியமுல்லே ஆரச்சிகே அருண சுதர்சக
மற்றும்
கௌரி மஞ்சுளா செனவீர.

11-1017

---

## அற்றோணி தத்துவத்தை இரத்துச்செய்தல்

மாத்தறை, கொடகம, பியகுசும் என்ற முகவரியைச் சேர்ந்த தொன் பியதாச அப்புதந்திரி ஆகிய நான் 2013, ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதி தென் மாகாண பதிவு அலுவலகத்தில் அனுமதிப்பத்திரம் 45 ஆவது பிரிவு, 76 ஆம் படிவம், 1855 ஆம் இலக்கத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட என்.ரී.சී. 4351 ஆம் இலக்க சாரதி அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட 2861 ஆம் இலக்க விசேட அற்றோணி அனுமதிப்பத்திரத்தை 2013, ஒற்றோபர் 28 ஆந் திகதியிலிருந்து அனைத்து ஒப்பந்தங்களுடன் இரத்துச் செய்கிறேன் என அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தொன் பியதாச அப்புதந்திரி.

11-1034

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : ஒடிசி ரிசோர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 94599
*கூட்டிணைப்புத் திகதி* : 2013.09.18
*பதிவு முகவரி* : இல. 71/ஏ, அம்பிலாவத்த வீதி, பொரலெஸ்கமுவ

சார்ட் பிசினெஸ் சிஸ்ரம்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

இல. 141/3, வொக்ஷோல் வீதி,
கொழும்பு 2.

11-971

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனிகளின் கூட்டிணைத்தல் பற்றி பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : வலவ வெலி ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 94343
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 02.09.2013
*பதிவுசெய்யப்பட்ட முகவரி* : இல. 517, 4 ஆவது ஒழுங்கை, சுசீலாராம வீதி, மாலபே

டபிள்யு. எஸ். வீரமன்,
கம்பனி செயலாளர்.

இல. 27/1, பெப்பிலியான வீதி,
நெதிமாலை,
தெஹிவளை.

11-1070

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : எஸ். ஜீ. அக்கயரில் கன்சல்டன்சி (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம்* : பீவீ 95056
*பதிவு முகவரி* : இல. 7/5, பகத்தல வீதி, கொழும்பு 3
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 23.10.2013

சரோஜா காமினி குணதிலக்க,
கம்பனி செயலாளர்.

11-856

**நிறுவனங்களின் ஒன்றிணைப்பு தொடர்பான பொது அறிவித்தல்**

சார்டொனே இன்வெஸ்ட்மன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் (பீவீ 82176), நில்வல்லா பீச் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் (பீவீ 82209) மற்றும் ஆர் அன்ட் ஆர் இன்வெஸ்ட்மன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் (பீவீ 82107) ஆகிய நிறுவனங்களின் ஒன்றிணைப்பு

சார்டொனே இன்வெஸ்ட்மன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட், நில்வல்லா பீச் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் மற்றும் ஆர் அன்ட் ஆர் இன்வெஸ்ட்மன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஆகிய நிறுவனங்களின் பணிப்பாளர் சபை உறுப்பினர்களின் தீர்மானங்களின்படி, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242(1) ஆம் பிரிவுக்கு அமைவாக சார்டொனே இன்வெஸ்ட்மன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட், நில்வல்லா பீச் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் மற்றும் ஆர் அன்ட் ஆர் இன்வெஸ்ட்மன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஆகிய நிறுவனங்கள் ஒன்றிணைக்கப்பட்டு தனி ஒரு நிறுவனமாக அதாவது சார்டொனே இன்வெஸ்ட்மன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் என்கின்ற பெயரில் தொடர்ந்தும் செயற்படும்.

மேற்படி ஒன்றிணைப்பு, கம்பனிகள் பதிவாளர் திணைக்களத் தினால் அனுமதியளிக்கப்படும் குறிக்கப்பட்ட திகதி ஒன்றிலிருந்து அமுலுக்கு வரவுள்ளது.

பணிப்பாளர்,
சார்டொனே இன்வெஸ்ட்மன்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்(பீவீ 82176),
நில்வல்லா பீச் ஹோல்டிங்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட் (பீவீ 82209)
மற்றும் ஆர் அன்ட் ஆர் இன்வெஸ்ட்மன்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட் (பீவீ 82107).

11-972

# ஏல விற்பனைகள்

**சம்பத் வங்கி பீ எல் சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

**சொத்துக்கள், நிலமனை ஏலவிற்பனை**

எம். டபிள்யூ. எம். பீ. என். பி. குலதுங்க - கணக்கு இல. 0040 5900 0549

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப் பாளர் சபையினால் 2009.02.26 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2010.07.16 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியிலும் 2010.07.07 ஆந் திகதிய ''திவயின'', ''ஐலண்ட்'', ''தினக்குரல்'' பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான, ஒரு கோடியே ஐந்து இலட்சத்து நாற்பதாயிரத்து எழுநூற் றுபத்துநான்கு ரூபா பதினான்கு சதம் (ரூ. 1,05,40,764.14) 2008, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி முதல் அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தி தீர்க்கும் திகதி வரை தொண்ணூற்றுமூன்று இலட்சத்து அறுபத்தையாயிரத்து ஏழு ரூபா எண்பத்தைந்து சதம் (ரூ. 93,65,007.85) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதின்மூன்று தசம் இரண்டு ஐந்து வீதம் (13.25%) வருமதியாகவுள்ள வட்டியுடன் விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள இங்கு அட்டணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரரான சொக்மன் அன்ட் சமரவிக்கிரம என்பவர் மூலமாக 2013.12.18 ஆந் திகதி மு. ப. 11.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோரலேயின் பல்லேபத்துவின் கடுவெல பிரதேச சபை எல்லைகளுக்குள் ஹோகந் தரையில் அமைந்த ''வெல்கிரிய எஸ்ட்டேட்'' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஐ. ரீ. மாதொல என்பவரால் தயாரிக்கப்பட்ட 2003, பெப்புருவரி மாதம் 2 ஆந் திகதியிடப்பட்ட இல. 2003/44 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 67 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு : லொட் 73 மற்றும் 70 ; கிழக்கு : லொட்கள் 70, 66 மற்றும் 64 ; தெற்கு : லொட்கள் 66, 64 மற்றும் 63 ; மற்றும் மேற்கு : லொட்கள் 63 மற்றும் 73. இவ்வெல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பத்து பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 10பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர உரிமைகள் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 2003/44 எனும் வரைபடத்திற்கு அமைவாக ஹோமாகம காணிப்பதிவ கத்தில் பரிமாணம்/பக்கம் ஜீ 1601/26 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

கீழே காட்டப்பட்டதன் மீது மற்றும் அதன் ஊடாக பிரவேசிக்கும் மார்க்க உரிமைகளுடனானது :-

இல. 2003/44 எனும் வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட லொட் 70 (20 அடிகள் அகல வீதிக்கான ஒதுக்கம்).

இல. 2003/44 எனும் வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட லொட் 62 (20 அடிகள் அகல வீதிக்கான ஒதுக்கம்).

இல. 2003/44 எனும் வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட லொட் 62 (20 அடிகள் அகல வீதிக்கான ஒதுக்கம்).

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

11-1082/1

**சம்பத் வங்கி பீ எல் சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

*2011 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, 2011 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

**சொத்துக்கள், நிலமனை ஏலவிற்பனை**

மில்லேனியம் டெகரேட்டிவ் மெட்டீரியல்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் - கணக்கு இல. 0040 1000 0942

2011 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க மற்றும் 2011 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கச் சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப் பாளர் சபையினால் 2012.03.29 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2012.05.18 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியிலும் 2012.05.10 ஆந் திகதிய "திவயின", "ஐலண்ட்", "தினக்குரல்" பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல் களுக்கிணங்க நிலுவை முதலான, முப்பத்தாறு இலட்சத்து பதினெட்டா யிரத்து முந்நூற்றிருபத்தெட்டு ரூபா இரண்டு சதம் (ரூ. 36,18,328.02) 2012, மாச்சு மாதம் 06 ஆந் திகதி முதல் அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தி தீர்க்கும் திகதி வரை முப்பத்துநான்கு இலட்சத்து அறுபத்தோராயிரத்து எண்ணூற்றுத்தொண்ணூற்றொரு ரூபா நாற்பத்தொன்பது சதம் (ரூ. 34,61,891.49) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினாறு வீதம் (16%) வருமதியாகவுள்ள வட்டியுடன் விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப் பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள இங்கு அட்டணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரரான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர் மூலமாக 2013.12.17 ஆந் திகதி மு. ப. 10.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் அறியத்தருகின்றோம்.

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளேயின் பல்லேபத்துவின் கோட்டை ஸ்ரீ ஜயவர்தனபுர மாநகர சபை எல்லை களுக்குள் நுகேகொடை நாவல வீதியில் அமைந்த "கஜுகாஹாஓவிட்ட மற்றும் நெலிதொட்டுவே ஓவிட்ட" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜீ. சந்ரசேன என்பவரால் தயாரிக் கப்பட்ட 2001, பெப்புருவரி 6 ஆந் திகதியிடப்பட்ட இல. 2001/118 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ரீ. எஸ். ஈ. விஜேசூரிய என்பவரால் தயாரிக்கப்பட்ட 1984, மாச்சு 26 ஆந் திகதியிடப்பட்ட இல. 1048 எனும் வரைபடத்தில் லொட் 2 ; கிழக்கு : வீதி (30 அடிகள் அகலம்) ; தெற்கு : 10 அடி அகல வீதி (உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ரீ. எஸ். ஈ. விஜேசூரிய என்பவரால் தயாரிக்கப்பட்ட 1984, ஏப்பிறல் 14 ஆந் திகதியிடப்பட்ட இல. 1058 எனும் வரைபடத்தில் லொட் 1E ) ; மேற்கு : கூறப்பட்ட இல. 1058 எனும் வரைபடத்தில் லொட் 1C ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பன்னிரண்டு தசம் ஐந்து பேர்ச் (0ஏ. 0றூ. 12.5பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் சகல வீதி உரிமைகள் ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள், மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 2001/118 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

கூறப்பட்ட லொட் 1 கீழே விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும்:-

மேற்கூறப்பட்ட நுகேகொடை நாவல வீதியில் அமைந்த "கஜுகாஹா ஓவிட்ட மற்றும் நெலிதொட்டுவே ஓவிட்ட" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ரீ. எஸ். ஈ. விஜேசூரிய என்பவரால் தயாரிக்கப்பட்ட 1984, ஏப்பிறல் 14 ஆந் திகதியிடப்பட்ட இல. 1058 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1D எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ரீ. எஸ். ஈ. விஜேசூரிய என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 1048 எனும் வரைபடத்தின் லொட் 2 ; கிழக்கு : ஜே. டி. டி சில்வா என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 1618 எனும் வரைபடத்தில் லொட் 5A2 ; தெற்கு : அதே காணியின் லொட் 1E ; மேற்கு : அதே காணியின் லொட் 1C ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பன்னிரண்டு தசம் ஐந்து பேர்ச் (0ஏ. 0றூ. 12.5பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் சகல வீதி உரிமைகள் ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள், மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 1058 எனும் வரைபடத்திற்கு அமைவாக தெல்கந்தை காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் M/3302/30 இல் பதிவுசெய்யப் பட்டுள்ளது.

கூறப்பட்ட இல. 1618 எனும் வரைபடத்தில் லொட் 5A2 உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் ஆர். சீ. திஸாநாயக்க என்பவரால் தயாரிக்கப் பட்ட 1955, ஓகத்து 19 ஆந் திகதியிடப்பட்ட இல. 1635 எனும் வரைபடத்தில் லொட் 25 மற்றும் கூறப்பட்ட இல. 1058 எனும் வரைபடத்தில் லொட் 1E இன் ஊடாகவும் அதன் மீதும் மற்றும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகளுடனானது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

குரூப் கம்பனி செயலாளர்.

11-1082/2

---

**ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ – அனுராதபுரம் கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை*

**அனுராதபுரம் நகரசபை எல்லைக்குட்பட்ட இரண்டாம் கட்டத்தில் புதிய பஸ் தரிப்பிடம் அமைந்துள்ள கும்பிச்சானகுளமஹேன எனும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் ரீ. பி. ஆரியசேன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 22.06.1990 ஆந் திகதிய 6/90 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் 1 எனும் காணித்துண்டும் அதனுள்ளடங்கும் மாடி வியாபாரக் கட்டிடமும் மற்றும் சகலதுமாகும்.**

**(பரப்பளவு : 2.53 பேர்ச்)**

**ஆதனத்தை வந்தடைதல்**.- அனுராதபுரம் பஸ் தரிப்பிடத்திலிருந்து சுமார் 50 மீற்றர் தூரம் பிரதான பாதையில் தஹய்யாகம சந்தி வரை வந்தால் இப்பாதையின் வலதுபக்கத்தில் இவ்வாதனம் அமைந்துள்ளது.

இவ்வாதனம் சத்துருசிங்ஹ ஆரச்சிகே துமிந்த ஸ்ரீ லலித் வீரசிங்ஹ என்பவர் கடப்பாடுடையவராக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.

இவ்வாதனம் 24.12.2013 ஆந் திகதி மு.ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு**.- 27.08.2010 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 06.09.2010 ஆந் திகதிய ''த ஐலண்ட்'', ''திவயின'' மற்றும் ''தினகரன்'' பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை**.- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ஏலவிற்பனை யாளரிடம் ரொக்கப்பணமாக செலுத்துதல் வேண்டும் :-

(1) கொள்முதல் விலையில் 10வீதம் (நூற்றுக்கு பத்து) ;

(2) பிரதேச சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) விற்பனை வரி ;

(3) ஏல விற்பனையாளர் கட்டணம் 2 1/2 வீதம் (நூற்றுக்கு இரண்டரை) ;

(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;

(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூ. 500 ;

(6) விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணம் ரூ. 2,000.

கொள்முதலில் மிகுதி 90 வீதம் இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்பட விருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு**.- பதில் பொது முகாமையாளர், (கடன் அறவிடுதல்), ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ, இல. 479, ரீ. பி. ஜயா மாவத்தை, கொழும்பு 10 உடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. : 011-2661835, 011-2661836.

ஐ. டப்ளியூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம்பெற்ற
ஏல விற்பனையாளர்.

இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை, மாவில்மட,
கண்டி.
தொலைபேசி இல. : 071-4755974, 071-8446374, 071- 7761706.
தொலைநகல் இல. : 081-2210595.

11-944

**ஹட்டன் நஷனல் வங்கி ப.வ.க. – கடுவளை கிளை**
(முன்னர் வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி என அறியப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை

**பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு (மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவகம் கோறளை, பல்லேபற்று கடுவலை மாநகர சபை எல்லைகளுக்குள், கடுவளையினுள் வெலிவிட்டவில் அமைந்துள்ளதும், கொழும்பு வீதி, வரிமரிப்பு இல. 252/26 ஐக் கொண்டதும் "நாரகன்கஹவத்தை என்ற ருக்கட்டனகஹவத்தை" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவை யாளர் ரீ. டி. ஜே. பெரேரா அவர்களால் தயாரிக்கப்பட்டு 08 சனவரி, 2008 திகதியிடப்பட்ட வரைபடம் இல. 6089 இல் குறிப்பிடப்பட்டு துண்டு இல. ஏ 2 என அடையாளமிடப்பட்டதுமான காணியினது) அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து ஏல விற்பனை**

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 1று. 29.00பே.)**

(கடப்பாடுடையவரான அங்கொடகே நிரோஷா பிரியங்கா பிகேராவிற்கு அளிக்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹட்டன் நஷனல் வங்கி ப.வ.க. இற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள ஆதனம்)

**ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி**.- கடுவளை நகரிலிருந்து கொழும்பு வீதி வழியே வெல்லம்பிட்டி பொலிஸ் பிரதேசத்தின் மென்ஸன் விளம்பரப் பலகை வரை சென்று, வலப்பக்கம் திரும்பி தாரிடப்பட்ட வீதியில் ஏறக்குறைய 150 மீற்றர் செல்ல இவ்வீதியின் இறுதியில் அமைந்துள்ள விற்பனைக்குரிய இவ்வாதனத்தை அடையலாம்.

மேலே விவரிக்கப்பட்டுள்ள ஆதனத்தை 20 திசெம்பர், 2013 ஆந் திகதி திங்கட்கிழமை மு. ப. 10.00 மணிக்கு அதே இடத்தில் நாம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்வோம்.

**தீர்மான அறிவித்தலுக்கு**.- 25 ஒற்றோபர், 2013 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 08 நவெம்பர், 2013 ஆந் திகதிய ''லக்பிம'', ''தினகரன்'' மற்றும் ''டெயிலி மிரர்'' ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்**.- வெற்றிபெறும் கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் தொகைகளை காசாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்தவேண்டிய உள்ளூர் அதிகார சபை வரி 1% (ஒரு வீதம்) ;
(3) ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் மீது 2 1/2% (இரண்டரை வீதம்) ;
(4) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;
(5) விற்பனைச் செலவு மற்றும் வேறேதேனும் கட்டணங்கள் (இருப்பின்) ;
(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணம்.

விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டிய இலங்கை அரசினால் அல்லது வேறேதேனும் அதிகார

சபையினால் அமுலாக்கப்பட்டு எப்போதும் ஏற்புடைத்தான கட்டணங்கள், வரிகள், வரிக்கட்டணங்கள் அல்லது வேறேதேனும் வரிகள் ஆகியவற்றுடன் சேர்த்து கொள்வனவு விலையின் மிகுதி 90%.

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆவணங்களையும் ''கொழும்பு 10, ரீ. பி. ஜயா மாவத்தை, இல. 479, ஹற்றன் நஷனல் வங்கி ப. வ. க., உதவிப் பொது முகாமையாளர்-அறவீடுகள்'' அவர்களிடம் பார்வையிட முடியும். தொலைபேசி இல. : 011-2661816 ; தொலைநகல் இல. 011-2661835.

டல்லாஸ் கெலார்ட்ஸ் ஒக்ஷன்ஸ் (பீவீரீ) லிமிட்டெட்,
நிபுணத்துவம்பெற்ற உத்தரவுபெற்ற ஏலதாரர்,
விலைமதிப்பீடுநர் மற்றும் ஆதன முகவர்.

இல. 146/3, கல்தேரா கார்டினஸ்,
துட்டுகெமுனு தெருவிற்கப்பால்,
கொஹுவளை.
தொலைபேசி இல. : 011-4302622, 011-4302623
தொலைநகல் இல. : 011- 2856013

11-1076/1

---

**பிரதேச அபிவிருத்தி வங்கி**

(முன்னர் வயம்ப அபிவிருத்தி வங்கி என அழைக்கப்பட்டது)

1997 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின் 43 ஆம் பிரிவுக்கு அமைய, தற்போது 2008 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின் 40 ஆம் பிரிவின்கீழ் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான விற்பனை

**பெறுமதிமிக்க சொத்து ஏல விற்பனை**

**வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், கருவலகஸ்வெவ உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட 639டி, அலுத்கம கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கு உட்பட்ட அலுத்கம கிராமத்தில் அமைந்துள்ள 'அலுத்கம காணி' என அழைக்கப்படும் காணித் துண்டு, அதன் எல்லைகளுக்கு உட்பட்ட அனைத்தும் உள்ளடங்கலாக.**

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 2று. 0பே.)**

பிரதேச அபிவிருத்தி வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2013 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 19 ஆந் திகதி வியாழக்கிழமை மு. ப. 11.00 மணிக்கு எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.

**தீர்மான அறிவித்தலுக்கு.**- தயவுசெய்து 2006, பெப்புருவரி மாதம் 10 ஆந் திகதியிடப்பட்ட அரசாங்க வர்த்தமானியையும், 2007, ஏப்பிறல் 25 ஆந் திகதிய ''தினமின'', ''த ஐலண்ட்'' பத்திரிகைகளையும், 2007, ஏப்பிறல் 24 ஆந் திகதிய ''தினகரன்'' செய்திப் பத்திரிகைகளையும் பார்வையிடவும்.

**ஏலதாரரை மாற்றுவது சம்பந்தமான அறிவித்தலுக்கு.**- 2011.04.08 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2011.03.30 ஆந் திகதிய ''தினமின'', ''டெயிலி நியூஸ்'' மற்றும் ''தினகரன்'' பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்தைச் சென்றடையும் வழி.**- புத்தளம் நகரிலிருந்து அனுராதபுரம் வீதியில் 29.9 கிலோ மீற்றர் வரை செல்லும்போது மேற்கூறப்பட்ட சொத்து பாதையின் வலதுபக்கத்தில் அமைந்துள்ளது. (28 மைல் கல்லுக்கு 100 மீற்றர் முன்னராக அலுத்கம வைத்தியசாலை வளாகத்திற்கு அடுத்ததாக அமைந்துள்ளது.)

**கொடுப்பனவு செய்யும் முறை.**- ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 25% (இருபத்தைந்து சதவீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்) ;
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2 1/2% (இரண்டரை சதவீதம்) ;
(4) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ. 500 ;
(5) விற்பனைக்கான கட்டணங்கள் மற்றும் வேறு ஏதேனும் கொடுப்பனவுகள் இருப்பின் அவையும் ;
(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரை வரி ;

கொள்முதல் விலையின் மீதி 75% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் வலய பொது முகாமையாளர், பிரதேச அபிவிருத்தி வங்கி, வடமேல் மாகாண அலுவலகம், இல. 155, நீர்கொழும்பு வீதி, குருநாகல் என்னும் முகவரியில் செலுத்தப்பட வேண்டும்.

மேலே கூறப்படும் வகையில் 30 நாட்களுக்குள் கொள்முதல் விலையில் மிகுதி செலுத்தப்படாத சந்தர்ப்பத்தில், ஏற்கனவே செலுத்தப்பட்டுள்ள தொகையை (25%) பறிமுதல் செய்து குறித்த சொத்தை மீண்டும் ஏலவிற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

உரிய சொத்து தொடர்பான காணி உறுதி மற்றும் ஏனைய விபரங்களை மேற்கூறப்பட்டுள்ள முகவரியில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும். தொலைபேசி இலக்கங்கள் : 037-2227567, 037-2227429, 037-2234350, 037-2234360 ; தொலைநகல் இல. : 037-2220013.

''முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது.''

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
ஒரே நாடு, ஒரே ஏலவிற்பனையாளர்,
121 வருடகால சேவை அனுபவம்.

| தலைமை அலுவலகம் : | நகர அலுவலகமும் காட்சியறையும் : |
|---|---|
| 24, டொரிங்டன் வீதி, கண்டி. | 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 5. |
| தொலைபேசி : 081-2227593 | தொலைபேசி : 011-2502680, 011-2585408 |
| தொ.பே./ஃபக்ஸ் : 081-2224371 | தொ.பே./ஃபக்ஸ் : 011-2588176 |
| மின்-அஞ்சல் : schokmankandy@sltnet.lk | மின்-அஞ்சல் : schokman@samera1892.com |

இணையத்தளம் : www.sandslanka.com

11-1028

**ஹட்டன் நஷனல் வங்கி ப.வ.க. – கடுவளை கிளை**
*(முன்னர் வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி என அறியப்பட்டது)*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

**பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு (மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவகம் கோறளை, பல்லேபற்று கடுவலை பிரதேச சபை எல்லைகளுக்குள், கொத்தலாவலையில் அமைந்துள்ளதும், கொழும்பு வீதி, வரிமரிப்பு இல. 100 ஐக் கொண்டதும் ''ரதாகேவத்தை என்ற மஹவத்தை'' என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. நவகமுவ அவர்களால் தயாரிக்கப்பட்டு 2008, சனவரி 10 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 3334 இல் குறிப்பிடப்பட்டு துண்டு இல. டி 1 என அடையாளமிடப்பட்டதுமான காணியினது) அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து ஏல விற்பனை**

***(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 21.1பே.)***

*(கடப்பாடுடையவர்களான அங்கொடகே ஜோசேப் பிகேரா மற்றும் அங்கொடகே நிரோஷா பிரியங்கா பிகேரா ஆகியோரிற்கு அளிக்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹட்டன் நஷனல் வங்கி ப.வ.க. இற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள ஆதனம்)*

**ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி.-** கடுவளை நகரிலிருந்து கொழும்பு வீதி வழியே ஏறக்குறைய 4 கி. மீ. செல்ல வலப்பக்கத்திலுள்ள விற்பனைக்குரிய இவ்வாதனத்தை (கார்கில்ஸ் புட் சிட்டி கடுவளை கிளைக்கு முன்னால்) அடையலாம்.

மேலே விவரிக்கப்பட்டுள்ள ஆதனத்தை 2013, திசெம்பர் 20 ஆந் திகதி திங்கட்கிழமை மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் நாம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்வோம்.

**தீர்மான அறிவித்தலுக்கு.-** 2013, ஒற்றோபர் 25 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2013, நவெம்பர் 08 ஆந் திகதிய ''லக்பிம'', ''தினகரன்'' மற்றும் ''டெயிலி மிரர்'' ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.-** வெற்றிபெறும் கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் தொகைகளை காசாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்தவேண்டிய உள்ளூர் அதிகார சபை வரி 1% (ஒரு வீதம்) ;
(3) ஏலதாரரின் தரகு விற்பனை விலையின் மீது 2 1/2% (இரண்டரை வீதம்) ;
(4) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;
(5) விற்பனைச் செலவு மற்றும் வேறேதேனும் கட்டணங்கள் (இருப்பின்) ;
(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணம்.

விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டிய இலங்கை அரசினால் அல்லது வேறேதேனும் அதிகார சபையினால் அமுலாக்கப்பட்டு எப்போதும் ஏற்புடைத்தான கட்டணங்கள், வரிகள், வரிக்கட்டணங்கள் அல்லது வேறேதேனும் வரிகள் ஆகியவற்றுடன் சேர்த்து கொள்வனவு விலையின் மிகுதி 90%.

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆவணங்களையும் ''கொழும்பு 10, ரீ. பி. ஜயா மாவத்தை, இல. 479, ஹற்றன் நஷனல் வங்கி ப. வ. க., உதவிப் பொது முகாமையாளர்-அறவீடுகள்'' அவர்களிடம் பார்வையிட முடியும். தொலைபேசி இல. : 011-2661816 ; தொலைநகல் இல. 011-2661835.

டல்லாஸ் கெலார்ட் ஒக்ஷன்ஸ் (ப்வீரீ) லிமிட்டெட்,
நிபுணத்துவம்பெற்ற உத்தரவுபெற்ற ஏலதாரர்,
விலைமதிப்பிடுநர் மற்றும் ஆதன முகவர்.

இல. 146/3, கல்தேரா கார்டின்ஸ்,
துட்டுகெமுனு தெருவிற்கப்பால்,
கொஹுவளை.
தொலைபேசி இல. : 011-4302622, 011-4302623
தொலைநகல் இல. : 011- 2856013

11-1076/2

---

**கொமர்ஷியல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ – ஜா-எல கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படுதல் 4 ஆவது சிறப்புச் சட்டத்தின் பிரகாரம் கொமர்ஷியல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ (பதிவு இலக்கம் பீகியூ 116) மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி இதன்கீழ் விபரிக்கப்பட்ட காணியை என்னால் அதே இடத்தில் 2013, திசெம்பர் மாதம் 20 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.*

**காணிகள் ஏல விற்பனை**

**மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், தாசியபத்து அலுத்குரு கோரலயில் சீதுவ நகரசபை எல்லையில் அமண்தொலுவ கிராமத்தில் அமைந்துள்ள நிலஅளவையாளர் எம். டி. எட்வட் 16.04.2007 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 4272 இல் காண்பிக்கப்பட்ட லொட் 04 மற்றும் இக்காணியில் அமைந்துள்ள எல்லாம் சேர்த்து.**

***(விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 15பே.)***

(கடன் எடுத்த தட்டகே சுகத் ஜயசாந்த மேற்படி ஆதனத்தை கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ க்கு ஈடுவைத்துள்ளார்.)

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.-** 2013.07.12 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், ''த ஐலண்ட்'', ''லக்பிம'', வீரகேசரி'' பத்திரிகைகளையும், ஏலவிற்பனை விளம்பரத்திற்காக 2013.11.29 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும் 2013.12.02 ஆந் திகதியுடைய ''வீரகேசரி'', ''த ஐலண்ட்'' மற்றும் ''லக்பிம'' பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**காணிக்குச் செல்லும் விதம்.-** கொழும்பு நகரத்தில் இருந்து (களனி பாலம்) நீர்கொழும்பு பிரதான றோட்டில் (ஏ3) ஒரு 21 கிலோ மீட்டர் தூரம் சீதுவை சந்தி வரை சென்று வலதுபக்கம் உள்ள கொட்டுகொட றோட்டில் (ரத்தொலுகமவிலிருந்து வரும் பிரதான றோட்) இந்த றோட்டில் ஒரு 1.3 மீட்டர் சென்று அமண்தொலுவவில் வலது பக்கம்

உள்ள அலுத்யெண றோட்டில் ஒரு 350 மீட்டர் சென்று தொட்டுபொல றோட்டில் ஒரு 150 மீட்டர் சென்று பிறகு "ரண் ஹோம்" வீட்டுத் திட்டம் அமைந்துள்ளது. லொட் 4 சிறியதான தார் போட்ட றோட்டில் மூன்று காணிகளுக்கு அப்பால் அமைந்துள்ளது. இது ஒரு 20 அடி பிரத்தியேக றோட் மூலம் காண முடியும்.

**கொடுப்பனவு செலுத்தும் விதம்**.- உத்தேச கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% ;

(2) உள்ளூராட்சிமன்ற வரி 1% ;

(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5 % ;

(4) நொத்தாரிசு கட்டணம் ரூபா 2,000 ;

(5) இலிகிதர் கட்டணம் ரூபா 500 ;

(6) ஏலத்திற்காக செலவுசெய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள் ;

(7) மிகுதி 90% ஏலத்திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பிரதான அலுவலகம் அல்லது ஜா-எல கிளையில் செலுத்த வேண்டும்.

வேறு விபரங்களுக்காக.- முகாமையாளர் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ, இல. 140, நீர்கொழும்பு வீதி, ஜா-எல. தொலைபேசி இல. : 2243614-5 ; தொலைநகல் இல. : 2243610.

எல். பி. சேனநாயக்க (சமாதான நீதவான்),
முத்த உத்தரவுபெற்ற ஏலதாரர், விலைமதிப்பீட்டாளர்,
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 182, 3 ஆவது மாடி,
புதுக்கடை வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி/தொலைநகல் இல. : 011-2445393.

11-1022